*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

**ISSN: 2456 – 4613**
**Volume – VII (1)**
**December - 2022**

# சிலப்பதிகாரத்தில் மனித உரிமைகள்

மலர்விழி, பா.
உதவிப் பேராசிரியா், வரலாற்றுத் துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding author: malarvizhip@vvvcollege.org**

**ஆய்வுச் சுருக்கம்**

உரிமை என்பது நம்மைச் சுதந்திதரமாக வாழ்விக்கும் ஓர் அடையாளம். பிறரால் அல்லது பிறிதொன்றினால் ஓர் உயிரினுடைய வாழ்வியல் சூழலுக்கும் பண்பாட்டுப் பின்புலத்திற்கும் எவ்விதத்திலும் இடர் ஏற்படாது அல்லது ஏற்படுத்தாது வாழ்ந்திடத் திடப்படுத்தும் ஓர் உணர்வுத் தளமே உரிமை ஆகும். மனிதன் பிறக்கும்பொழுது முழுச்சுதந்திரம் உள்ளவனாகத்தான் பிறக்கிறான். ஆனால் அவன் வளர்ந்து வரும் பின்னைய நாள்களில் அரசியல் நெருக்கடி, சமுதாயப் பண்பாட்டுச் சூழல் மீது ஏற்படும் தாக்குதல் இவைகளால் தனது சுதந்திரமான உரிமைகளைப் பறிகொடுக்கிறான். இவ்விழப்பு அவனுடைய வாழ்வியல் பின்புலத்தையும் அழிக்கத் தொடங்குகிறது. உலக வரலாற்றில் உயிரைத் துச்சமெனமதிக்கும் இழப்புக்களும் இன்றுவரை நாம் காணும் விடுதலைக் கள நிகழ்வுகளாகவே தொடா்கின்றன. பொதுவாக, இலக்கியங்கள் மனித மனங்களை அமைதிப்படுத்தும் பணியில் அதிகமாகவே கட்டுப்பாடுகளையும், விதிகளையும் விதைக்கின்றன. குடிமக்கள் காப்பியம் என்று பெருமை பெற்ற சிலப்பதிகாரம் உரிமைகள் பற்றிய கருத்துக்களை உரிமைமதிப்பு, உரிமைமறுப்பு, உரிமை மீறல் ஆகிய மூன்று நிலைகளிலும் பல்வேறு நிகழ்வுகளைக் கொண்டு பதிவுசெய்து வைத்துள்ளது. யாதும் ஊரே யாவரும் கேளீா் என்பதற்கேற்ப ஒரு நாட்டைச் சோ்ந்தவா்கள் வாழ்தலின் பொருட்டு மற்றொரு நாடு சென்று தங்குவதற்கான உரிமை இருந்திருக்கிறது. சிலம்பு தோன்றிய காலத்தில் உரிமை மீறல்கள் சில இருந்துள்ள போதிலும் மனிதா்களுக்கான உரிமைகள் பல நிலைகளில் இருந்துள்ளதை அறிய முடிகிறது.

**குறிப்புச் சொற்கள்: வாழ்வுரிமை, ஒப்பந்த உரிமை, உரிமை மதிப்பு, உரிமை மீறல்கள்.**

**முன்னுரை**

உரிமை என்பது நம்மைச் சுதந்திதரமாக வாழ்விக்கும் ஓர் அடையாளம் பிறரால் அல்லது பிறிதொன்றினால் ஓர் உயிரினுடைய வாழ்வியல் சூழலுக்கும் பண்பாட்டுப் பின்புலத்திற்கும் எவ்விதத்திலும் இடர் ஏற்படாது அல்லது ஏற்படுத்தாது வாழந்திடத் திடப்படுத்தும் ஓர் உணர்வுத் தளமே உரிமை ஆகும்

இயற்கை நிலையில் (State of Nature………) வாழ்ந்த ஒரு மனிதனுக்கு வரையறுக்கப்பட்ட உரிமை என்பது தேவை இல்லாத ஒன்றாகக் கூட இருந்திருக்கலாம். ஆனால் அந்த இயற்கை வாழ்வைக் கடந்து கூட்டு வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை என்று நிலைப்படும்பொழுது வாழ்வின் பொருட்டு உறவுகளை அல்லது அவரவர்களுக்குரிய பொருட்களைத் (உணவு முதற்கொண்டு உறைவிடம் முதலாக) தமக்கே உரியதென்று பாதுகாக்க முனைந்ததிலிருந்து அல்லது பயன்படுத்திட முயன்ற சூழலிலிருந்து அவனது உரிமை களைப்பெற்றிருக்கலாம்.

“மனிதன் பிறக்கும்பொழுது முழுச்சுதந்திரம் உள்ளவனாகத்தான் பிறக்கிறான்” ஆனால் அவன் வளர்ந்து வரும் பின்னாளைய நாள்களில் அரசியல் நெருக்கடி காரணமாகவும் மற்றும் சமுதாயப் பண்பாட்டுச் சூழல் மீது ஏற்படும் தாக்குதல்களாலும் தனது சுதந்திரமான உரிமைகளைப் பறிக்கொடுக்கிறான். இவ்விழப்பு அவனுடைய வாழ்வியல் பின்புலத்தையும் அழிக்கத் தொடங்குகிறது. உலக வரலாற்றில் உயிரைத் துச்சமென மதித்தலும், இழப்புக்களும், இன்றுவரை நாம் காணும் விடுதலைக்கள நிகழ்வுகளாகவே தொடர்கின்றன.

வாழ்க்கை மீதான சாதாரணப் பயன்பாடுகள் ஒரு மனிதனுக்கு மறுக்கப்படும் பொழுதுதான், தனக்கு, தனது மக்களுக்கு, தன் சமுதாயத்திற்கு, இந்நாட்டின் மீதான உரிமைகள் என்ன? என்றும் ஏன் மறுக்கப்படுகின்றன? காரணங்கள் யாவை? என்று உணர்ந்து தேடியலையும் பொழுதே உரிமைகள் அறியவருகின்றன. மற்றொரு நிலையில் மறுக்கப்படும் பொழுதுதான் உரிமைகள், அறியவருகின்றன (உதாரணமாக பொதுக்குளமாக, பொதுக்கோவிலாக, பொதுவழியாக இருந்து நீ அந்தக்குளத்தில் நீர் எடுக்கக்கூடாது. இந்தக் கோயிலுக்குள் நுழையக்கூடாது. இந்த வழியாக நீ நடக்கக் கூடாது).

**அரசியல் வடிவிலான சட்ட உரிமைகள்**

அரசு என்ற அமைப்பு தொடக்கத்தில் குடும்பம் என்ற நிலையத்தில் இருந்து தோன்றியதே! குடும்பங்கள் பெருகிக் கிராமமாகவும், கிராமங்கள் பெருகி நாடாகவும், அரசாகவும் நிலைபெற்றன. என்றே அறியப்படுகிறது. அவ்வகையில் குடும்பம், குழு வீட்டுச் சமூகம் இவற்றிலிருந்து வலுப்பெற்றுச் சமூக நிறுவனங்களாக உருவாகிய அரசியல் சட்ட வடிவில் மக்களுக்குப் பல உரிமைகளை நிலைநிறுத்துகிறது.

இவற்றின் நிறுவனங்களாக உருப்பெற்றுச் சிறக்கின்ற சமயங்களும்,

கூட்டுவாழ்க்கையில் நடவடிக்கையில் முன்னோடியாக விளக்குகின்ற கிராமியக் கட்டுப்பாடுகளும், சட்ட வடிவிலான உரிமைகளை உருவாக்கிக் காப்பதில் நேரடியாகவும், மறைமுகமாகவும் அதிகப் பங்கெடுக்கின்றன. நிறுவனமாக்கப்பட்ட அரசியலில் மனிதனின் வாழ்க்கைக்கே அதிக மதிப்பளிக்கப்படுகிறது. இவ்வாறு மனித வாழ்வின் மதிப்புக்களை மையமாக வைத்துச் சட்டரீதியாக நிலை நிறுத்தப்படுகின்ற உரிமைகள் பல்வேறு பண்பாட்டுச் சூழல்களுக்கு ஏற்ப (மொழி. இனம், சமயம், நிலவியல் மற்றும் பண்பாட்டுச் சூழுல்) தனது உயிர், தற்காப்பு. சுதந்திரம், பொருள் உடைமை போன்றவைகளில் ஒவ்வொருவர் உரிமையிலும் மற்ற யாரும் குறுக்கிடாது கடமை பற்றிய பொருளோடு இயற்கை உரிமைகள், மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள், விட்டுக்கொடுக்க முடியாத உரிமைகள் என்ற வகையில் இன்று வற்புறுத்தப்படுகின்றன. மேலும் சட்டம் மற்றும் சமய அறங்களின் அடிப்படையில் ஏதாவது ஒன்றைப் பெறுவதற்கு அல்லது செயல்படுத்துவதற்கு உரிய நேர்மையான வழியே உரிமை என்று வாழ்வியல் நலன்களை உருவாக்கிப் பயன்படுத்தும் வழிமுறையாகத்தான் சட்டங்கள் செயல்படுகின்றன. அவ்வகையில் வாழ்வுரிமை, சுதந்திர உரிமை, சொத்துரிமை, ஒப்பந்த உரிமை, கல்வியுரிமை என்னும் ஐந்து உரிமைகளும் பொது உரிமைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சட்ட ரீதியாக உரிமைகளை ஒருவர் அவ்வுரிமையை அனைத்து வழிகளிலும் பயன்படுத்தக் கடமைப்பட்டவர் எனக்கூறிப் பொது நலனைப் பாதிக்கும்படியான உரிமைகளைக் கட்டுப்படுத்தவும் இன்றைய அரசியல் சட்டம் பரிந்துரைக்கிறது.

## சிலப்பதிகாரத்தில் மனித உரிமைகள்

பொதுவாக இலக்கியங்கள் மனித மனங்களை அமைதிப்படுத்தும் பணியில் அதிகமாகவே ஈடுபடுத்தப்படுகின்றன. அவ்வாறு அமைதிப்படுத்தும் முயற்சியில்தான் உரிமைகளையும், கட்டுப்பாடுகளையும், விதிகளையும் விதைக்கின்றன. குடிமக்கள் காப்பியம் என்று பெருமை பெற்ற சிலப்பதிகாரம், உரிமைகள் பற்றிய கருத்துக்களை உரிமை மதிப்பு, உரிமை மறுப்பு, உரிமை மீறல் ஆகிய மூன்று நிலைகளிலும் பல்வேறு நிகழ்வுகளைக் கொண்டு பதிவுசெய்து வைத்துள்ளது.

## உரிமை மதிப்பு

முடியாட்சிக் காலத்தில் அரசனுக்கும் அவன் புரியும் ஆட்சிக்கும் வழங்கப்பட்ட ஒப்பந்த வடிவிலான ஒரு அதிகாரமே அரசியல் உரிமையாகக் கருதப்பட்டது. மக்களைக் காக்கும் பொருட்டுத் தனது அதிகார வரைவிலான உரிமைகளை அரசன் பல படிநிலைகளாகப் பகிர்ந்தளித்துத் தனது கட்டுபாட்டிற்குள் வைத்திருந்த நிலை நன்கு அறிய வருகிறது.

அரசேற்கும் உரிமை என்பது வழிவழி உரிமையாக இருந்த சூழுலில் அவைக்களம் புகுந்த ஒரு காலக்கணிதன் மூத்தமகன்

நெடுங்சேரலாதன் இருக்க இளையவன் இளங்கோவை நோக்கி ‘மன்னனாகும் பாக்கியம் உனக்கே’ என்று கூறுகிறான். இது அரசியல் உரிமையை மதிப்பற்றதாக்கிவிடும் என்று உணர்ந்தே அரசியலில் இளங்கோவடிகள் துறவறம் மேற்கொண்டதாக அறியவருகிறது. இளங்கோவடிகள் அரசாட்சியை ஏற்பதென்பது ஒப்பந்த வடிவிலான அரசியல் உரிமையை மீறுவதாகும். இவ்வுரிமை மீறல் குழப்பத்தை ஏற்படுத்தி மக்களுக்கும் நிலையான அரசியலுக்கும் இழப்பை ஏற்படுத்தும் இவ்விழப்பு இளங்கோவால் தவிர்க்கப்படுகிறது. “கட்டுப்பாடுகளுக்கு ஒப்புதல் அளித்துப் பாதுகாப்பான சமுதாய வாழ்க்கைக்கு வழி வகுப்பதே சமுதாய ஒப்பந்தத்துக்கான உரிமையாகும்”. என்பதேபோல் கட்டுப்பாடுகளோடும் மதிப்புடனும் அவ்வுரிமை மதிக்கப்படுகிறது. கண்ணகி மதுரை மாநகருக்குள் நுழையும்பொழுது சாதாரண நிலையில் செல்வங்கள் குவிந்துகிடக்கும் செருக்குகள் இல்லாமல்தான் நுழைகிறாள். இங்குத் தன் கணவன் கள்வன் என்று பழிசுமத்தப்பட்டு வீழ்ந்ததைப் பொறுக்காமல் வரம்பின்றி அதிகாரங்களைக் குவித்து வைத்திருக்கும் மன்னனிடம் சென்று

**“இறைமுறை பிழைத்தோன் 20 (26)**
**தேராமன்னா (20 (50)**
**நற்றிறம்படராக் கொற்கை வேந்தே”**

என்றெல்லாம் கூறிக் கடுமையாக விமர்சிக்கிறார்கள். முடியாட்சிக் காலத்தில் மன்னனுக்குரிய அதிகாரங்கள் (மக்களுக்குக் கட்டுபட்டவன் என்ற சூழலிலும்) வரம்பில்லாதவை. ஆனாலும் அவன் கண்ணகியின் வாதத்தை மதித்து அவள் சுமத்திய குற்றச்சாட்டிற்குத் தலை வணங்குகிறாள். மக்களுக்கு நம்மால் வழங்கப்பட்ட உரிமைக்குத் தானே மதிப்பளித்து வணங்கும் சிறப்பு இது.

பரத்தையருக்கு வாழ்வியலில் பல உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தாலும் பொதுவாழ்விலும், அரச நிகழ்வுகளிலும் சிறந்த மதிப்பும், உரிமையும் வழங்கப்பட்டிருந்ததை அறிய முடிகிறது. நகரச் செல்வந்தர்களும், அவையோர்களும் வியக்கும்படியான கலையரசியாக மாதவி மிளிர்கிறாள். மன்னன் நேரடியாகவே பாராட்டி

**“இலைப்பூங்கோதை, இயல்பினின் விழாஅமை**
**தலைக்கோல் எய்தித் தலைஅரங்குஏறி,**
**விதிமுறைக் கொள்கையின் ஆயிரத்து எண் கழஞ்சு**
**ஒருமுறையாகப் பெற்றனள்”**

என்று அறிவிக்கிறான் சமூகத்தில் அவளுக்கு அளிக்கப்படும் உரிமை மறுப்பு அல்லது கட்டுப்பாடுகள் பற்றி அவன் எண்ணாது தான் ஒரு மன்னன் என்ற நிலையில் அவளுடைய உரிமைகளை மதித்தளித்த அளவு பெருமைக்குரியது.

புகார் நகரில் உள்ளவாகள் மதுரை நகரிலும், மதுரை நகரில் உள்ளவர்கள் புகார் நகரிலுமாகத் தங்கு தடையின்றிச் சென்று வரவும், வணிகம் செய்திடவும் பெற்றிருந்த சுதந்திரம் மேன்மைமிக்கது. தகாத நிகழ்வுகளால் தனது வாழ்வியல் மதிப்புக்களை இழந்த கோவலன் வேற்று

அரசன் ஆளும் நாடு என்றும் எண்ணாது. மதுரை மூதூர் சென்று வணிகம் செய்து இழந்த வாழ்வை மீட்க முயல்கிறான். மனித குலத்திற்குள் உள்ளீடுகளாக அமைந்திட வாழ்வியல் அமைதி மற்றும் உறவுகளைப் பகிர்ந்து வாழும் நிலை போன்றவற்றில் பரந்துபட்ட உரிமைகள் இங்கு நிலை நிறுத்தப்படுகின்றன.

தவறு என்று தெரிந்தால் தட்டிக்கேட்கும் உரிமை யாவருக்கும் உண்டு. தவசிகளும், தெய்வங்களும் (பூதங்களும்) மனிதர்களும், (கோவலன், அந்தணன்) ஈடுபடுத்தப்படுகின்றனர். பல சமயங்கள் பின்பற்றப்படுகின்றன. பல சமயங்களின் பெரியோர்கள் உலாவருகின்றனர்.

**உரிமை மறுப்பு**

சிலப்பதிகாரத்தில் உரிமை மறுப்பு நிகழ்வுகள் அதிகமாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. அதிலும் பெண்களுக்கு மனித உறவுகளிலே நெடுகிலும் பெண்கள் தாழ்ந்தும் ஆண்கள் உயர்ந்தும் இருப்பதைப் பார்க்கிறோம். மனிதன் அவளைச் சரிநிகர் சமானமாகக் கருதியதில்லை தங்களில் ஒருத்தியாகவும் நினைக்கவில்லை. அவர்களைத் தாங்கள் (ஆண்கள்) ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்வதற்கான வேறு ஆளாகவே கருதினர். என்று கூறப்படுவதைப் போல் சிலப்பதிகாரத்துப் பெண்கள் நிலையும் இருந்துள்ளது. என்பதனை

மாமுது பார்ப்பான் மறைவழிகாட்டி" என்பதன் மூலம் அறியலாம் கோவலன் கண்ணகியைத் திருமணம் முடிக்கிறான், ஆனால் அவளையும், அவளது உரிமைகளையும், மனரீதியான உணர்வுகளையும், மதித்ததாகவே தெரிவதில்லை. இது அவளுடைய உரிமைகளை மறுப்பதாகத்தான் தோன்றுகிறது. கண்ணகியும் தன்னுடைய கணவனின் தகாத உறவுகளைத் தட்டிக் கேட்கவில்லை, அந்த உரிமை அவளுக்கு மறுக்கப்பட்டுள்ளது. போற்றா ஒழுக்கம் புரிந்தீர்' என்று ஒரு சில வார்த்தைகள் கூறிச் சுட்டிக்காட்டிட மட்டும் முயற்சி செய்துள்ளாள். கண்ணகி மட்டுமல்லாது அவளுடைய பெற்றோர்களுக்கும் அவ்வுரிமை மறுக்கப்பட்டிருந்ததோ என்று எண்ணத் தோன்றுகிறது.

உரிமைகளைப் பறித்துக்கொண்ட ஒரு மனிதனை மற்றொரு மனிதன் அடிமைபடுத்திக் கொள்ளும் உரிமை ஒத்தத்திருந்து பிறந்தது எனக் கூறப்படுகிறது. போரில் கைப்பற்றப்பட்ட பொருள்களை அரசனும் அவனுடைய படைப் பகுதிகளும் எவ்வித வரம்புமின்றிப் பயன்படுத்துவதைக் கொண்டு கேளிராகக் கொண்டுவரப்பட்டுப் பரத்தையாக வாழும் மகளிரும் அவ்வாறே வைக்கப்பட்டிருந்தனர்.

மன்னனால் பாராட்டி வழங்கப்பட்ட முத்துமாலை மாதவிக்கு விலை பேசப்படுகிறது. அதிலும் அவள் பிறந்த நாட்டிலேயே

> **“நகர நம்பியர் திரிதரு மருகில்**
> **பகர்வனர் போவதோர் பான்மையின்**
> **மாமலர் நெடுங்கண்மாதவி**
> **மாலைவாங்குநர் சாலும் நம்கொடிக்கு”**

என்று கூவி விற்கப்படுகிறாள். அடிமைப்படுத்தப்படும் சூழலில் மறுக்கப்படும் எந்த உரிமையும் நியாயமற்றது, கேவலமானது.

ஒரு பெண்ணுக்குரிய அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டுப் பூச்சிகளிலும் கீழாக விற்கப்படுகிறாள். மிகக் கேவலமான இந்தச் சமூகத் தாழ்ச்சியை யாரும் தடுக்கவில்லை. அப்படி வாழ்வதுதான் அப்பெண்ணுக்கு வழங்கப்பட்ட உரிமையென்றால் இது அவள் விற்கப்பட்டதிலும் கேவலமானதாகும்.

அவள் யாருடனும் உறவு வைத்துக்கொண்டு வாழலாம் ஆனால் உரிமை கொண்டாட முடியவில்லை. கண்ணகியோடு வாழ்ந்த காலக் கட்டங்களைவிடக் கோவலன் மாதவியோடு வாழ்ந்த நாள்கள் அதிகம். ஆனால் பல ஆண்டுகள் விடுதல் அறியா விருப்புடன் வாழ்ந்தும்கூடக் குலக்கொடி ஒன்றனுக்குத் தாயான பின்பும்கூடக் கோவலனைத் தன் கணவன் என்று மாதவியால் உரிமை கொண்டாட முடியவில்லை. மாதவி கோவலனின் மனைவி என்ற உரிமையும் மணிமேகலை அவன் மகள் என்ற உரிமையும் மறுக்கப்படுகிறது. அன்றைய சமூகம் அந்த உரிமையை அவளுக்கு வழங்கிடத் தயாரில்லை. மாதவி கோவலனை மட்டுமே காதலனாக ஏற்றுக் கொண்டிருந்த சூழுலில் அவனைத் தவிர்த்த வேறு யாருடனும் வாழ விரும்பிடாத நிலையில் தன் மகளை “மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை” என்கிறாள் முறைப்படிக் கோவலனின் மகள் என்று தான் அவள் கூறியிருக்கவேண்டும். ஆதிக்கம் அவளை அப்படி அவளுக்கான உரிமையை மறுத்திருக்கிறது.

**உரிமை மீறல்கள்**

உரிமையுள்ளது என்பதற்காகத் தவறாகப் பயன்படுத்துவதும் பிறர் உரிமையில் தலையிடுவதும் உரிமை மீறலாகும். தனக்குப் பேச்சுரிமை இருக்கிறது என்பதற்காக வம்பர் தம்மக்கள் என்று கூறப்பட்ட நிலையில்

> **“உடன் வயிற்றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை**
> **கடவதும் உண்டோ”**

என்று கூறி அடுத்தவர் சுதந்திரத்தில் தலையிட்டு முள்ளுடைக்காட்டில் முதுநரிகளாகிக் கதறுகின்றனர் (கணவன் என்ற முறையில் பாண்டிமாதேவியோடு ஊடுவதென்பதும் அவளுடைய ஊடலைத் தீர்க்க முயல்வதின் போதும் பாண்டிமாதேவிக்கும் மன்னனுக்குரிய தனிமனித உரிமை) இச்சூழுலில் அவர்களது அதிகார உரிமையைப் பொற்கொல்லன் தவறாகப் பயன்படுத்தியதாகத்தான் தெரிகிறது. கோவலன் திருடனல்ல என்பது அவனுக்குத் தெரிந்திருந்த சூழலிலும் தன்னைக் காத்துக்கொள்ள (அதிகார உரிமையைப்) பயன்படுத்தி விடுகிறான்.

இந்த உரிமை மீறல் பெருங்கேட்டை விளைவிக்கிறது.

தன் கணவன் கொல்லப்பட்டதற்கு நீதி கேட்பதென்பது கண்ணகியின் உரிமைதான். ஆனால் அந்த உரிமையைத் தவறாகப் பயன்படுத்துகிறான். இதனால் உண்மையான குற்றவாளி யார் என்பதை அவளால் புரிந்துகொள்ள முடியாத சூழுலில் மன்னன் தண்டிக்கப்பட, ஒன்றுமறியாப் பாண்டிமாதேவியும், மதுரை மாநகரும் மக்களும், பெருமிழப்பைச் சந்திக்கின்றனர். இது உரிமையைத் தவறாகப் பயன்படுத்தியதற்கும், மீறியதற்கும் ஏற்பட்ட விளைவு. இவ்வாறு சிலம்பில் அன்றைய நிலையில் உரிமைகள் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## முடிவுரை

சிலப்பதிகாரக் காலக்கட்டம் மக்களுக்கான முடியாட்சியின் உரிமைகளை மதிப்பதில் மிக உயர்ந்த நிலையில் விளங்கியுள்ளது. ஆனால் அரசியலில் மறுப்புக்களும், மீறல்களும் நிகழ்ந்துள்ளன. ஆனால் பெண்களுக்கான உரிமை மதிப்பில் அது மிகத் தாழ்ந்து கிடக்கிறது.

இவ்வாறு உரிமை மீறல்கள் நிறைய காணப்பட்டாலும் உரிமைகள் உள்ள நிலையுமிருந்ததை அறியமுடிகிறது. கணிகைக்குலத்தில் பிறந்த பெண்ணாக இருந்த போதிலும் துறவைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மாதவிக்கு இருந்துள்ளது. சோழநாட்டைச் சேர்ந்த பெண் என்ற போதிலும் பாண்டிய நாட்டு மன்னனைச் சென்று நேரிடையாகக் கேள்வி கேட்கும் உரிமை கண்ணகிக்கு இருந்திருக்கிறது.

“யாதும் ஊரே யாவரும் கேளீர்” என்பதற்கேற்ப ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள் வாழ்தலின் பொருட்டு மற்றொரு நாடு சென்று தங்குவதற்கான உரிமை இருந்திருக்கிறது. சிலம்பு தோன்றிய காலத்தின் உரிமை மீறல்கள் சில இருந்துள்ளபோதிலும் மனிதர்களுக்கான உரிமைகள் பல நிலைகளில் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

## அடிக்குறிப்பு

1. சாவித்திரி எஸ் (2001). சமுகவியல், சென்னை, அடையாளம் பதிப்பகம்.
2. கோமேதகவேலு எம்கே (2005). சிந்தனையாளர் ரூசோ. சென்னை, பிரேமா பிரச்சுரம்.
3. சோமசுந்தரமூர்த்தி (2007). நமது சமூகம், சிதம்பரம், குமரன் பதிப்பகம் நிலையம்.
4. கலைக்களஞ்சியம் (தொகுதி 5).
5. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், பதிகம், அடிகள் 66, 160-163, 166-169, 188, 287-288.
6. புலியூர்க்கேசிகன் (2015). சிலப்பதிகாரம் தெளிவுரை, சென்னை, பாரி நிலையம்.
7. புலியூர்க்கேசிகன் (2017). சிலப்பதிகாரம், மூலமும் உரையும், சென்னை, கௌரா பதிப்பகம்
8. சாமிநாதையர் உ.வே (2021). சிலப்பதிகார மூலமும் (அரும்பதவுரையும் அடியார்க்கு

நல்லாருரையும்) சென்னை: டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்.

9. நடராஜன். தி.சு (2015). சிலப்பதிகாரம் மறுபதிப்பு, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்